1975 நவம்பர் 7]

கேட்கிறுர் என்று கருதுகிறேன். அவர் அந்த நிதியை இன்ன இன்ன வகைகளில்தான் செலவு செய்ய வேண்டும் என்பதற்கு விதிமுறைகள் இருக்கின்றன.

கடலங்குடிப் பகுதியில் திருமண மண்டபம்.

*243 **விஞ—திரு. என். கிட்டப்பா**: மாண்புமிகு அறநிலைய துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் ஒன்றியம் கடலங்குடி பஞ்சாயத்துப் பகுதியில் அறநிலையத் துறையால் திருமண மண்டபம் ஒன்று கட்டப்பட மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: ஆலயத்தின் நிதி நிலைமையைக் கருதியும், தற்போதுள்ள பொருள்களின் விலையேற்றத்தை மனதில் கொண்டும் ஆலய அறங்காவலர்களின் விருப்பப்படி ரூ. 30,000-க்கு திருமண மண்டபம் கட்டுவதற்கான திருத்திய மதிப்பீடு ஒன்று தயாரிக்க கோரப்பட்டுள்ளது. பொது மக்களிடமிருந்து நன்கொடை வசூல் செய்து வேலையைத் தொடங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளன.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, இந்தத் திருமண மண்டபத்தை விரைவில் கட்ட, அந்தத் திருக்கோவில் அறங்காவலர்கள் கோரியிருக்கிற அனுமதியை அரசு விரைவில் வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: என்ன அனுமதி கோரி யிருக்கிறுர்கள் என்று தெரியவில்லை.

திரு. எஸ். வடிவேல்: பேரவைத் தலைவர் அவர்களே, கட்டப்படுகிற திருமண மண்டபத்திற்குப் பெருந்தலைவர் காமராஜர் பெயர் சூட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இது கோவில் நிதியில் இருந்து கட்டப்படுகிற திருமண மண்டபம்.

திரு. கே. எ. வகாப்: பொதுவாக திருமண மண்டபங்கள் கட்டப்படுவதற்கு எந்த அடிப்படையில் அறநிலையம் உதவி செய் கிறது? கோவில்கள் எவ்வளவு பணம் தரவேண்டும்? பொது

மக்களிடம் இருந்து எவ்வளவு நிதி வசூலிக்கப்பட வேண்டும்? இதற்கென்று விதிமுறைகள் இருக்கின்றனவா? ராணிப் பேட்டையில் கூட திருமண மண்டபம் கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் நிதி உதவி தருவதாகச் சொன்னார்கள்? அது எந்த அடிப்படையில் என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அடிப்படை எவ்வளவு பர்சென்ட் என்பது ஒன்றும் கிடையாது. அந்தந்தக் கோவில் களின் நிதியைப் பொறுத்தும், அவர்கள் பொதுமக்களிடம் இருந்து வசூலித்துள்ள நன்கொடையைப் பொறுத்தும், அந்தக் கட்டிடத்தின் எஸ்டிமேட்டைப் பொறுத்தும், இதர கோவில்களின் உபரி நிதியில் இருந்து இதற்கு உதவி செய்யப் படுகிறது.

திரு. என். கிட்டப்பா: இந்தத் திருமண மண்டபத்தைக் கட்டிமுடிக்க இந்தத் திருக்கோவிலுக்குச் சொந்தமான 32 சென்ட் நிலத்தை, அங்கே பள்ளிவாசல் கட்ட விற்பனை செய்து, அந்த நிதியைப் பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்க வேண்டு மென்று அறங்காவலர்கள் கோரியிருக்கிறார்கள். அவர்களது கோரிக்கைக்கு அரசு விரைவில் அனுமதி தர முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, இந்தப் பிரச்னை ஆணையாளருடைய பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இப்பொழுது கோயிலை ஒட்டி திருமண மண்டபங்களை அதிகமாகக் கட்டுகிறார்கள். திருச்செந்தூரில் கூடத் தனியார் கட்டுகிறார்கள். அந்த மாதிரி கோயில் பக்கத்திலே திருமண மண்டபம் கட்ட இடம் கொடுக்க கோயில் நிர்வாகஸ்தர்கள் வசதி செய்து கொடுப்பார்களா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, திருமண மண்டபத்தைக் கட்டி, கோயிலினுடைய பொறுப்பிலேயே விட்டு விடுவதானால் கொடுக்க ஆட்சேபணை இல்லை.